மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கூட்டுறவுப் பதிவாளர் அவர்கள், எப்படி அமைத்தால் அது சீராகவும், செம்மையாகவும் இருக்கும் என்பதைப்பற்றி பரிசீலித்துக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் கூறிய கருத்தும் அவருடைய கவனத்தில் உள்ளது. தக்க நடவடிக்கைகளை விரைவில் எடுக்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 41-வது விதியின்கீழ், அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

(vi) தஞ்சை மாவட்டத்தில் இருபோக தாளடி நிலங்களுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ், அவசரப் பொது முக்கியமான கீழ்க் கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தஞ்சாவூர் மாவட்டத்தில் இரு போகத் தாளடி நிலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாட்டால் பயிர்கள் காய்ந்து வெடித்துவிட்டதன் காரணமாக விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இனி இவ்வாறு தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் செய்ய வேண்டிய அவசியம் பற்றி."

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தென் மேற்கு, வட கிழக்கு ஆகிய இரு கார்க் காலங்களும் இவ்வாண்டு பொய்த்ததன் விளைவால் இம் மாநிலம் இடுக்கண் எய்தியது. இயல்பாக மேட்டூர் நீர்த்தேக்கம் ஜூன் திங்கள் 12-ம் நாளன்று திறந்து விடப்படும். மேற்சொன்ன தேதியன்று நீர்த் தேக்கத்தில் இருந்த நீர் அளவு போதுமானதாக இல்லாத காரணத்தால், தென் மேற்குப் பருவ மழை தவறாது பெய்யும் என்பதற்கான சூழ்நிலைகள் உறுதியான பின்னர் 3—7—1967 அன்றுதான் நீர்த்தேக்கம் பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டது. காவிரி சங்கமுகப் பகுதியில் வழக்கமாகப் பயிரிடும் குறுவை இரு போகப் பயிர்ப் பரப்பளவைத் தவிர ஒரு போகப் பயிர் நிலங்களில் அதிகப் பரப்பளவில் ஏ.டி.டி. 27 நெல் வகையை முதல் பயிராகப் பயிரிடவும், அதன் பின்னர் பெரும் பரப்பளவில் ஒரு குறுகிய கால நடுத்தரப் பயிரை இரண்டாவது பயிராகப் பயிரிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தென் மேற்குப் பருவ மழை ஜூன் முடிவிலும் ஜூலை தொடக்கத்திலும் காலந் தாழ்ந்து பெய்தது. இயல்பாகப் பெய்யும் அளவிற்கும் குறைவாகவே அதாவது சுமார் 13 சதவிகிதம் குறைவாக இவ்வாண்டு மழை

பெய்தது. இதனால் நீர்த்தேக்கத்திற்கு வருகிற நீரின் அளவு 17 சதவீதம் குறைந்தது. மிகவும் சிக்கனமாகவும், விழிப் போடும் பாசனத்திற்கான நீரை முறைப்படுத்தியதன்மூலம், சங்கமுகப் பகுதியில் குறுவை ஏ.டி.டி. 27 நெல் பயிர் நல்ல வகையில் வளர்ந்து அறுவடையாவதற்கு வகை செய்யப்பட்டது. தென்மேற்குப் பருவக்காலத்தில் இயல்பான அளவிற்குக் குறை வாகவே நீர்த்தேக்கத்தில் நீர் வந்ததால், இரண்டாம் பயிர்க் காலத்திற்குத் தேவையானதும் போதுமானதுமான நீரை மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தேக்க இயலவில்லை. இத்துடன் காவிரியின் நீர்கோள் பகுதியில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டது. அறுபது சதவீதம் குறைவாக மழை பெய்தது. நீர்த் தேக்கத்தின் வரவோ 65 சதவீதம் குறைந்தது. எனினும், 1967 அக்டோபர் திங்களிலும், 1967 நவம்பர் திங்கள் முதல் பாதியிலும், 1967 டிசம்பர் திங்கள் முதல் பாதியிலும் சங்கமுகப் பகுதியில் பெய்த மழையைப் பயன்படுத்திக்கொண்டு, இக்கால அளவுகளில் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் விடுவது குறைக்கப்பட்டது. நீர் விடுவதற்கான முறை மாற்றுத் திட்டம் மூலமும், கால இடையீடுகளில் நீரை மொத்தமாக அனுமதிப்பதன் வாயிலாகவும் முறைப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாடுகள் மூலம், சம்பாப் பயிரை வளரச் செய்யவும், அறுவடை செய்யவும் முடிந்தது.

தாளடிப் பயிரைப் பொறுத்தவரையில், மேட்டூர் நீர்த்தேக்கத் தின் நீரின் அளவையும் பயிருக்குத் தேவையான நீரின் அளவு குறித்தும் அரசு அடிக்கடி ஆய்வு செய்தது. 1967 டிசம்பர் பிற்பகுதியில் மழை பெய்யாததாலும், நீர்த்தேக்கத்தில் குறைவான நீர் இருந்ததாலும், நீர் விடுவது கடினமாயிருந்தது. தாளடிப் பயிர் வளரும் 4.6 லட்சம் ஏக்கரில், 2.3 லட்சம் ஏக்கருக்கு 11—2—1968 அன்றைய நிலையின்படி, இரண்டொரு முறை நீர் தேவைப்பட்டது. விளைந்து வருகிற பயிர்களை இயன்ற அளவுக்குப் பாதுகாக்கும்பொருட்டு, மேட்டூர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரை 22.05 அடியிலிருந்து 14.55 அடி மட்டத்திற்குக் குறைத்துவிட்டு, சுமார் 205.4 கோடி கன அடி நீர் விடப்பட்டது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் இவற்றிடையே முறை மாற்றுத் திட்டத்தை மேற்கொள்வதன்மூலம் நீர் விடப்பட்டது. வேளாண்மைப் பொறியியல் துறை இயன்ற இடங்களில் கூடுதல் நீரை வழங்கும் பொருட்டு, 86 எண்ணெய்ப் பொறி விசையேற்றங் களையும் டிராக்டர் பொருத்திய 20 விசையேற்றங்களையும் பயனுக்குக் கொணர்ந்தது. வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் பயன்படுத்தப்பட்டன. கிணறுகளிலிருந்து நீர் இறைப்பது சாத்தியமாயிருப்பதற்கென இயன்ற இடங்களில் விசையேற்றங் களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்படி தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்கமுகப் பகுதியில் தாளடிப் பயிரைப் பாதுகாப்பதற்கென இவ்வாறெல்லாம், இயன்ற அளவு முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.